சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் அணி செயலாளர் டாக்டர் சுபேர்கான் சிறப்புரையாற்றினார்.

வக்ஃப் வாரிய சட்டத்திருத்த மசோதா!

சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு களம் காண தயங்காது!

அணி செயலாளர் டாக்டர் சுபேர்கான் தலைமையில் நடைபெற்ற நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, நவ. 17-

"வக்ஃப் வாரிய சட்டத்திருத்த மசோதா குறித்து ஒன்றிய அரசு தன்னிச்சையாக செயல்படுவதை ஏற்க முடியாது, இதனைக் கண்டித்து கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு களம் காண தயங்காது" என்று கழக அணி செயலாளர் டாக்டர் சுபேர்கான் தலைமையில் நடைபெற்ற நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநில துணைச் செயலாளர்கள் இரா.அன்வர்கான், நூருல்லா, ஜோசப்ராஜ், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, அடையாறு ஷபீல், கா.ரபிஅகமது, மு.ஷாகுல் அமீது ஆகியோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் முன்னதாக, திராவிட இயக்கத்தின் கொள்கைகளை தன் எழுச்சிமிகு எழுத்துகளால் பட்டி தொட்டியெங்கும் கொண்டு சேர்த்த கழகத்தின் கொள்கைச் செல்வம்; மிகச்சிறந்த எழுத்தாளர் மறைந்த முரசொலி செல்வம் அவர்களின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்து, கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

அது வருமாறு:-

குறிப்பாக, மாற்று மதங்களிலிருந்து இஸ்லாம் மதத்தைத் தழுவியவர்களுக்கு பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் சான்றிதழும் (BCM) 3.5% இட ஒதுக்கீடும் வழங்கப்படும் என அரசாணை வெளியிட்ட முதல்வர் அவர்களுக்கு அனைத்து இஸ்லாமிய சமுதாய மக்களின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

"எல்லார்க்கும் எல்லாம்" கிடைத்திட எண்ணற்ற பல திட்டங்களை தந்திட்டு எளியோரின் வாழ்வில் ஏற்றமிகு மாற்றங்களை உருவாக்கிடும் நாடு போற்றும் நம் திராவிட மாடல் அரசிற்கு உறுதுணையாய், உற்ற துணையாய் விளங்கிடும் கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு துணை முதலமைச்சர் பொறுப்பினை வழங்கிய கழகத் தலைவர்; தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பாக நெஞ்சம் நிறைந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

உலகப் பொதுமறையாம் திருக்குறள் தந்த திருவள்ளுவர் புகழை வையத்திற்கு உணர்த்திட குமரி முனையிலே வானுயர சிலை அமைத்தார் தலைவர் கலைஞர் அவர்கள். செம்மொழி நாயகர் தலைவர் கலைஞர் வழியில் வரும் டிசம்பர் மாதம் 31 மற்றும் ஜனவரி 1 ஆம் தேதிகளில் குமரிமுனையில் வானுயர்ந்து நிற்கும் வள்ளுவர் சிலையின் வெள்ளி விழா கொண்டாட்டத்தை முன்னெடுத்திருக்கும் முதல்வர் அவர்களுக்கு ஒட்டு மொத்த தமிழக மக்களின் சார்பாக இக்கூட்டத்தின் வாயிலாக நன்றி தெரிவிக்கப்படுகிறது.

எண்ணமும், செயலும் கழகத்துக்காகவும், தமிழ்நாட்டு இளைஞர்களின் முன்னேற்றத்துக்காகவும் அர்ப்பணித்து நாளைய தலைமுறையை வழிநடத்தும் கழக இளைஞரணிச் செயலாளர்; ஆற்றல்மிகு இளம் தலைவர் அவர்களின் பிறந்த நாளையொட்டி, நவம்பர் 27 ஆம் தேதி இளைஞர்களின் எழுச்சி நாளாக ஏழை எளிய மக்களை மகிழ்விக்கும் வகையில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் கழக மாவட்டங்களில் மிகுந்த எழுச்சியுடன் கொண்டாடுதல்.

நடந்து முடிந்த 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர், நம் கழக அரசு சிறுபான்மையின மக்களின் வாழ்வு சிறக்க செய்திட்ட சாதனைகளை "நம்மில் ஒருவர் நமக்கான தலைவர் மு.க.ஸ்டாலின்" எனும் தலைப்பில் கருத்தரங்கங்கள் மூலம் சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் மாவட்டங்கள் தோறும் கொண்டு சேர்த்தோம்.

அதன் தொடர்ச்சியாக, சிறுபான்மையினரின் ஒரே பாதுகாவலர் ஒப்பற்ற தலைவர்; முதலமைச்சர் அவர்கள் என்பதை உரக்கப் பேசிட வரும் ஜனவரி மாதம் முதல் திருச்சி, சேலம், வேலூர் மற்றும் சென்னை உள்ளிட்ட மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளில் கருத்தரங்கம் நடத்த திட்டமிடப்பட்டு ள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிடினும் என்றைக்கும் சிறுபான்மையினரின் மக்களுக்கு தோளோடு தோள் நிற்கும் மகத்தான இயக்கம் என்பதை மக்கள் மன்றத்தில் பதியச் செய்திடும் வகையில், ஆறாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று இந்தியாவின் நம்பர் 1 முதல்வராக திகழும் முதலமைச்சர் அவர்களின் சாதனைச் சரித்திரத்தையும், சிறுபான்மையினருக்கு செய்திட நலத்திட்டங்களையும் தமிழகமெங்கும் கொண்டு சேர்த்தல்.

மேலும், 2026 சட்டமன்றத் தேர்தலுக்கான பணிகளை இன்றே துவங்கி ஏழாவது முறையாக கழகம் ஆட்சிய மைக்க கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு நிர்வாகிகள் அயராது உழைத்திட உறுதியேற்போம்.

வக்ஃப் சட்டத்திருத்த மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் (ஜேபிசி) முடிவுகளை அதன் தலைவரான பாஜக எம்.பி. ஜெகதாம்பிகா பால் தன்னிச்சையாக எடுப்பது கடும் கண்டனத்துக்குரியது. வக்பு வாரிய சட்டத் திருத்த மசோதா குறித்து ஆராய தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய மக்களவை உறுப்பினர்கள் 21 பேரும், மாநிலங்களவை உறுப்பினர்கள் 10 பேரும் இடம்பெற்றுள்ள நிலையில், வக்பு மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழு தலைவர் தன்னிச்சையாகவும், ஆதிக்க மனப்பான்மையுடனும் செயல்படுவது துளியும் ஏற்கத்தக்கதல்ல.

தி.மு.க உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்களின் முடிவுகளுக்கு உறுதுணையாக இருப்பதோடு, சிறுபான்மையினரின் நலனை நேரிடையாக பாதிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திட கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலோடு கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு களம் காண தயங்காது என்பதை இக்கூட்டத்தின் வாயிலாக எச்சரிக்கிறோம்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருப்பெரும்புதூர் தொகுதிக்குட்பட்ட குன்றத்தூர் நகராட்சியில் வாக்காளர் சேர்த்தல், நீக்கல், திருத்தல் செய்யும் முகாமை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் தொகுதி தேர்தல் பணி பார்வையாளர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

"திராவிட மாடல்" அரசின் திறன்மிகு மையங்களால் தெற்காசியாவிலேயே

முதலீட்டாளர்கள் தொழில் புரிய உகந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது!

சென்னை, நவ. 17 –

"திராவிட மாடல் அரசின் திறன்மிகு மையங்களால் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மிகவும் பயனடைந்து வருகின்றன. முதலீட்டாளர்கள் தொழில் புரிய உகந்த மாநிலமாக வும், முதல் முகவரியாகவும் தமிழ்நாடு விளங்குகிறது என "தினகரன் நாளேடு தலையங் கத்தில் பாராட்டு தெரிவித் துள்ளது.

2030 ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை அடைய வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்து தமிழ்நாடு முதல்வர் அவர்கள் அதிவேக பாய்ச்சலில் சென்று கொண்டுள்ளார். தமிழ்நாட்டில் உயர்கல்வி சேர்க்கை விகிதமானது நாட்டின் சராசரியைவிட கூடுதலாக அதாவது 51.4 விழுக்காடாக உள்ளது. பல திறன்மிக்க பணி யாளர்களை பெற்றிருப்பதால் பல வெளிநாட்டு நிறுவனங்களும் தமிழ்நாட்டை நோக்கி வருவதற்கு முக்கிய காரணமாக அமைந்திருக்கிறது. சுவீடன் நாட்டைச் சேர்ந்த 4 புதிய நிறுவனங்கள் தமிழ் நாட்டில் சென்னை, கோவையில் தொழில் முதலீடுகளை செய்ய முன்வந்துள்ளது.

தமிழ்நாட்டில் ஏற்கனவே 70 சுவீடன் நிறுவனங்கள் செயல்பட்டு வரும் நிலை யில் தற்போது மேலும் 4 நிறுவனங்கள் முதலீடுகளை செய்ய முன் வந்துள்ளதால் தமிழ்நாட்டைச் சேர்ந்த படித்த இளைஞர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்புகள் கிடைக்கும். சமீபத்தில் அமெரிக்கா சென்றிருந்த தமிழ்நாடு முதல்வர் அவர்கள், 17 நாட்கள் அங்கேயே தங்கி 25 நிறுவனங்களுடன் மேற்கொண்ட சந்திப்பில் ரூ.7,618 கோடி மதிப்பிலான 19 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார். இதன்மூலம் 11,516 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். அதோடு அல்லாமல் அரசின் வேண்டுகோளை ஏற்று போர்டு நிறுவனம் மீண்டும் தமிழ்நாட்டில் செயல்படவும் முன்வந்துள்ளது.

உற்பத்தித் துறை மற்றும் சேவைத் துறை ஆகிய இரண்டிலுமே முன்னணியில் இருக்க வேண்டும். அப்போது தான் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை பெற முடியும் என்ற அரசின் கொள்கை முடிவுகளின் படி வெளிநாட்டு முதலீடுகளை மட்டுமே ஊக்குவிக்காமல் உள்நாட்டு தொழில் முயற்சியும் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. இதற்கேற்ப திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அரசின் சார்பில் ஐடி பார்க், டைடல் பார்க் தொடங்கப்பட்டு தொழில் நிறுவனங்களுக்கு வசதி வாய்ப்புகள் உருவாக்கி கொடுக்கப்படுகின்றது.

ஒரு காலகட்டத்தில் ஐடி நிறுவனங்களை சென்னை, பெங்களூரு, ஐதராபாத் போன்ற முன்னணி நகரங்களில் மட்டுமே காணமுடியும். ஆனால் இன்றைக்கு தமிழ்நாடு அரசின் திட்டமிட்ட செயல்பாடுகளால் 2ம் கட்ட நகரங்களிலும் ஐடி நிறுவனங்கள் வரத்தொடங்கி உள்ளன. அதேபோல தமிழ்நாட்டில் தொழில் துறை என்றாலே சென்னை, கோவை மண்டலங்கள்தான் என்ற நிலை மாறி இன்றைக்கு எல்லாத் தொழில்களையும் எல்லா மாவட்டங்களிலும் தொடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. நகரம், கிராமம் என பாகுபாடு பார்க்காமல் தொழில் கொள்கை வகுக்கப்பட்டுள்ளதால் ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்டத்தில் உள்ள தொழில் வளர்ச்சிக்கு ஏற்ப தொழிற்சாலைகளும், தொழில் பூங்காக்க ளும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் பின்தங்கிய மாவட்டமான அரியலூர் மாவட்டத்தில் ரூ.1000 கோடி செலவில் காலணி தொழிற்சாலை அமைக்கப்படும் என்றும், இதன் மூலம் 22 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்றும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்து அந்த பணிக்கு நேற்று அடிக்கல் நாட்டியுள்ளார்.

தொழிற்சாலைகளை தொடங்குவதோடு நின்றுவிடாமல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றவாறு தயார்படுத்திக் கொள்ளவும், மேம்பட்ட உற்பத்திக்காகவும், அரசின் சார்பில் திறன்மிகு மையங்கள் அமைக்கப்படுகின்றன. இந்த திறன்மிகு மையங்களால் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மிகவும் பயனடைந்து வருகின்றன. தெற்காசியாவிலேயே தொழில் புரிவதற்கு உகந்த மாநிலமாக மட்டுமல்லாது, முதலீட்டாளர்களின் முதல் முகவரியாகவும் தமிழ்நாடு மாறி வருகிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள் ளது.

"தினகரன்" நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

தினகரன்

நவம்பர் 16, 2024 சனிக்கிழமை

முதலீட்டாளர்களின் முகவரி

2030 ம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை அடைய வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்து தமிழ்நாடு முதல்வர் அதிவேக பாய்ச்சலில் சென்று கொண்டுள்ளார்.

தமிழ்நாட்டில் உயர்கல்வி சேர்க்கை விகிதமானது நாட்டின் சராசரியைவிட கூடுதலாக அதாவது 51.4 விழுக்காடாக உள்ளது. பல திறன்மிக்க பணியாளர்களை பெற்றிருப்பதால் பல வெளிநாட்டு நிறுவனங்களும் தமிழ்நாட்டை நோக்கி வருவதற்கு முக்கிய காரணமாக அமைந்திருக்கிறது. சுவீடன் நாட்டைச் சேர்ந்த 4 புதிய நிறுவனங்கள் தமிழ்

மாதவரம் வடக்கு பகுதி 23 அ வட்டம் காவாங்கரை கே. எஸ். நகர் சென்னை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற வாக்காளர் சேர்த்தல், நீக்கல் சிறப்பு முகாமில், மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி வட்டச் செயலாளர் வி. ஆர். குப்பன் முன்னிலையில், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு நேரடியாக பார்வையிட்டு பணிகளை துரிதப்படுத்திய போது எடுத்த படம். இதில் வட்ட நிர்வாகிகள், பாக முகவர்கள் ராமச்சந்திரன், உசேன் மொஹிதீன், அம்மு, சுதாகர், அறிவழகன், முத்துகிருஷ்ணன், பார்பன், அப்துல் சமது, அரி, பார்த்திபன், யுவராணி, கலைச்செல்வி, லாரன்ஸ் , வாசுதேவன், அமுதா, சுதா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு உதவி செய்தார்கள்.

பாங்காக்கில்

மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த முபாரக்கிற்கு விபத்து!

எம்.எம்.அப்துல்லா எம்.பி.யிடம் வைத்த கோரிக்கையையடுத்து அயலக தாய்லாந்தின் சார்பாக சென்னை அழைத்து வர நடவடிக்கை!

மயிலாடுதுறை, நவ.17-

கடந்த 29 மே 2024 அன்று பாங்காக் வந்த மயிலாடுதுறை மாவட்டம் நீடூரைச் சேர்ந்த முபாரக் அவர்களுக்கு எதிர்பாராதவிதமாக ஜூன் 17 2024 அன்று கனரக வாகனம் மோதிய விபத்தில் தலையில் அடிப்பட்டு மூளையில் பலத்த காயம் ஏற்பட்டது. இதனால் இருமுறை தலையில் அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டு தொடர்ந்து சுயநினைவின்றி இன்றுவரை பாங்காக்கில் உள்ள லெர்ட்சின் மருத்துவமனையில் தீவிர மருத்துவ சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பல மாதங்கள் சுய நினைவின்றி இருப்பதாலும் தலையில் அறுவைச் சிகிச்சைகள் மேற்கொண்டதாலும், மருத்துவச் செலவு கடுமையாக அதிகரித்து வந்துள்ளது. எனவே தமிழ்நாடு திரும்பி அங்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற நாங்கள் மருத்துவ மனையை வேண்டினோம். அவரது காயங்களின் அளவு காரணமாகவும், கோமாவில் இருப்பதாலும் ஸ்ட்ரெச்சர் படுக்கையில் வைக்கப்பட்ட நிலையில் மட்டுமே பயணிக்க முடியும் என அவர்கள் தெரிவித்தனர், இது அவரது குடும்பத்தினருக்கு மேலும் மன வருத்தத்தையும் குறிப்பிடத் தக்க நிதிச் சுமையையும் ஏற்படுத்தியது

இதுகுறித்து நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம். அப்துல்லாவிடம் NRTIA தாய்லாந்தின் சார்பாக கோரிக்கை வைத்தோம்.

இதனை அவர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று துணை முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் பாதிக்கப்பட்ட நபரை இந்தியா அழைத்துச் செல்ல அயலகத்துறையின் சார்பாக ரூ.10,41,648/- வழங்கப்பட்டது.

அவர், தாய் ஏர்வேஸ் விமானத்தில் மேல் சிகிச்சைச் காக சென்னை கொண்டு செல்ல வரப்பட இருக்கிறார்.

இது குறித்து தாயுள்ளத்தோடு துரித நடவடிக்கை எடுத்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், எம்.எம்.முகமது அப்துல்லா எம்.பி. புலம்பெயர் தமிழர்கள் மறுவாழ்வு மற்றும் நல ஆணையர் கிருஷ்ண மூர்த்தி, மறு வாழ்வு மற்றும் புலம்பெயர் தமிழர்கள் நல உதவி ஆணையர் அசோக் குமார்,

சிகிச்சைக்கு ஆதர வளித்த நலம் விரும்பிகள் ஆகிய அனைவருக்கும் NRTIA தாய்லாந்து சார்பாகவும் முபாரக் அலியின் குடும்பத்தினர் சார்பாகவும் வாழ்நாள் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாங்காக்கில் மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த முபாரக் என்பவருக்கு விபத்து ஏற்பட்டதை தொடர்ந்து அவரை சென்னை அழைத்து வர எம்.எம்.அப்துல்லா எம்.பி.யிடம் வைத்த கோரிக்கையையடுத்து அயலக தாய்லாந்து சார்பாக சென்னை அழைத்து வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி 62 அ வட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகள் முன்பும் தலைமைக் கழகத்தின் ஆணைப்படி முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி பகுதி கழக செயலாளர் மண்டல குழு தலைவர் எஸ் மதன் மோகன் முன்னிலையில் புதிய வாக்காளர் சேர்த்தல் பெயர் நீக்குதல் திருத்துதல் சிறப்பு முகாம் நடைபெற்றது இந்நிகழ்வில் வட்டக் கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் பாக முகவர்கள் (BLA2) பாக உறுப்பினர்கள் (BLC) பங்கேற்று பணியினை மேற்கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பூண்டி கே. கலைச்செல்வன்

நவம்பர் 17 (2007)

திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளராகவும், திருவாரூர் மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

மாவட்டத்தின் கழகத் தோழர்களுக்கெல்லாம் தோன்றாத் துணையாக விளங்கி, திருவாரூர் மாவட்டத்தில் கழகம் மென்மேலும் பீடுநடை போட தளர்விலாது பணியாற்றியவர். கொடியோர் சிலரால் படுகொலைக்கு ஆளானார்.

"சுழன்று சுழன்று கழகப் பணியாற்றி வந்த காளை" என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.